# சுவாமி தயானந்தா கலை & அறிவியல் கல்லூரி

## மஞ்சக்குடி

முனைவர். செ. கணேசமூர்த்தி

தமிழ்த்துறை

**பாடத் தலைப்பு** – மடங்களின் சைவ பணிகள், பகுத்தறிவு இலக்கியம், சங்க இலக்கியம், நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, புறநானூறு, முல்லைப்பாட்டு.

பாடத் தயாரிப்பு

முனைவர். செ. கணேசமூர்த்தி

வெளியிட்டுள்ளது. ஆண்டுதோறும் இம்மடம் தமிழறிஞர்களுக்கு பட்டமளித்துச் சிறப்பு செய்து வருகிறது.

## திருப்பனந்தாள் மடம்

இந்த மடம் காசிவாசி தில்லைநாயக சுவாமிகளால் நிறுவப்பட்டது. குமரகுருபரர் கலம்பகம், மூன்று பிள்ளைத் தமிழ் இரண்டு, மும்மணிக் கோவை இரண்டு முதலிய பன்னிரண்டு நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். சிவக்கொழுந்து தேசிகரின் பாடல்களையும் தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், திருவிளையாடல் புராணம், கந்தபுராணம் போன்ற நூல்களையும் இம்மடம் பதிப்பித்துள்ளது. சீறாப்புராணம், தேம்பாவணி, இலக்கண நூல்கள், அகராதிகள், கலைக்களஞ்சியங்களை இம்மடம் பதிப்பித்து வெளியிட்டுள்ளது. குமரகுருபரர் என்ற திங்கள் இதழை இம்மடம் வெளியிட்டு வருகின்றது.

## மதுரை மடம்

சைவமடங்களில் காலத்தால் முற்பட்டது மதுரை மடமாகும். திருஞானசம்பந்தர் மதுரைக்கு வந்தபோது தங்கிய மடம் இதுவாகும். பிற சமயம் சார்ந்தவர்களுக்கு சிவதீட்சை அளித்து சைவசமயத்தில் சேர்த்துக்கொள்ளும் புதுமைப் பணியினை இம்மடம் செய்து வருகிறது.

## தொண்டை மண்டல மடம்

காஞ்சி சங்கர மடத்திற்கும் முந்திய தொன்மையான மடம் இதுவாகும். சிற்றிலக்கியங்கள் பலவற்றைப் பதிப்பித்து வெளியிட்டு, தமிழ் மொழியை வளர்க்கும் பணியைத் தொடர்ச்சியாக செய்து வருகிறது.

## குன்றக்குடி மடம்

காரைக்குடிக்கு அருகே உள்ள இம்மடம் ஞானப்பிரகாச முனிவரின் சிவஞான சித்தியார், சுபக்க உரை போன்ற நூல்களை வெளியிட்டுள்ளது. இம்மடம் பெரியபுராணம் முழுமையையும் உரையுடன் பதிப்பித்து வெளியிட்டுள்ளது. இம்மடம் 'மக்கள் சிந்தனை', 'அறிக அறிவியல்' ஆகிய இதழ்களை வெளியிட்டு வருகின்றது.

## வீரசைவ மடங்கள்

கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் துரைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் தமிழ்நாட்டின் பல இடங்களில் இம்மடங்கள் நிறுவப்பட்டன. இவற்றை வீரசைவ மடங்கள் என்பர்.

### 1. மயிலம் மடம்

*இம்மடம் சிவப்பிரகாச சுவாமிகளின் நூல்களையும், பிரபுலிங்க லீலை நூல் உரையையும் வெளியிட்டுள்ளது.*

### 2. திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் மடம்

*இம்மடம் சிதம்பர சுவாமிகளால் தோற்றுவிக்கப்பட்டது. சிதம்பர சுவாமிகள் பாடிய பல நூல்களையும், திருப்போரூர்ச் சந்நிதிமுறை என்ற தொகுப்பு நூலையும் வெளியிட்டு உள்ளது. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் நூலை உரையுடன் வெளியிட்டுள்ளது.*

### 3. திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் மடம்

*இம்மடம், ஞானியார் சுவாமிகளால் தோற்றுவிக்கப்பட்ட இவரின் கந்தசஷ்டி விழா சொற்பொழிவுகள், ஞானியார் நினைவுமலர் என்னும் பெயரில் சைவசித்தாந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளது.*

### 4.போரூர் சாந்தலிங்க சுவாமி மடம்

*இம்மடம் சாந்தலிங்க சுவாமிகளால் உருவாக்கப்பட்டது. சுவாமிகளின் நெஞ்சு விடுதூது, வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம் முதலிய நூல்களை வெளியிட்டுள்ளது.*

### 5. திருவண்ணாமலை மடம்

*இம்மடம் குகை நமச்சிவாயரின் “அருணகிரிஅந்தாதி ஆறுமுக சுவாமிகளின்” ‘நிட்டானுபூதி’ போன்ற நூல்களை வெளியிட்டுள்ளது.*

*இம்மடங்களோடு சிரவணபுரம் கௌமாரமடம், திலகவதியார் மடம், காஞ்சிகாமகோடி மடம் போன்ற மடங்கள் தமிழ் இலக்கியங்களைப் பதிப்பித்து வெளியிடும் திருப்பணியை செய்து வந்துள்ளன.*

# 5. பகுத்தறிவு இலக்கியம்

## சித்தர் இலக்கியங்கள், இராவண காவியம்

### சித்தர் இலக்கியங்கள்

சித்து வேலைகளைச் செய்ய வல்லவர்கள் சித்தர்கள் என்று அழைக்கப்படுவர். சாதாரண மனிதர்களிடம் காணப்படாத வியக்கத் தக்க உள்ள ஆற்றலைப் பெற்றவர்கள் என்றும், மெய்ஞானம் உடையவர்கள் என்றும், மருத்துவம், சோதிடம், மந்திரம், இரசவாதம் தெரிந்தவர்கள் என்றும் அழைப்பர். எளிமையான வாழ்க்கையை வாழ்ந்து இறப்பினை வென்றவர்கள். கூடுவிட்டு கூடுபாயும் திறத்தைச் சார்ந்தவர்கள் என்றும் அழைக்கப்படுவர். ஞானத் தீறன் மிக்கப் பாடல்களை அழகிய மொழிநடையோடு பாடியவர்கள். இவர்கள் செய்யும் சித்துக்கள் எட்டு வகைப்படும். இவற்றை அட்டமா சித்திகள் என்றழைப்பர். அவை

1. அணிமா = உடலைச் சிறிதாக்கிக் கொள்ளும் திறன் பெற்றவர்
2. மகிமா = உடலைப் பெரிதாக்கிக் கொள்ளும் திறன் மிக்கவர்கள்
3. கிரிமா = மலைபோன்று உடலைத் திடமாக்கிக் கொள்ளும் திறன் மிக்கவர்கள்
4. இலகிமா = உடலைப் பஞ்சுபோல் மென்னையாக ஆக்கிக் கொள்ளும் திறன்மிக்கவர்.
5. பிராப்தி = எந்த ஒன்றையும் நினைத்த உடன் அடையும் திறன் மிக்கவர்கள்
6. பரகாமியம் = பிறர் உடலில் புகுந்து வெளிவரும் திறன் மிக்கவர்கள்
7. ஈசத்துவம் = ஒன்றை உருவாக்கிப், பாதுகாத்து, இறுதியில் அழிக்கும் திறன் பெற்றவர்கள்.
8. வசித்துவம் = உலக உயிர்களைத் தன்வசப்படுத்தி, தன் ஆளுமையின் படி நடக்கும் திறன் பெற்றவர்கள்.

*சித்தர்கள் பலர் இருப்பினும் மரபில் பதினென் சித்தர்கள் என்று கூறுவது மரபாகும், சித்தர்கள்.*

| | |
|---|---|
| 1. திருமூலர் | 11. உரோமமுனி |
| 2. சிவவாக்கியர் | 12. கொங்கணச் சித்தர் |
| 3. பாம்பாட்டிச் சித்தர் | 13. கருவூர்ச்சித்தர் |
| 4. அகப்பேய்ச் சித்தர் | 14. பட்டினத்தார் |
| 5. அழுகுணிச்சித்தர் | 15. பத்திரகிரியர் |
| 6. இடைக்காட்டுச சித்தர் | 16. அகத்தியர் |
| 7. குதம்பைச் சித்தர் | 17. தேரையர் |
| 8. கடுவெளிச்சித்தர் | 18. சுப்பிரமணிய சித்தர் |
| 9. போகர் | |
| 10. சட்டைமுனி | |

## 1. திருமூலர்

* *சித்தர்களுள் முதன்மையானவர்*
* *கி.பி பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்தவர்*
* *இவர் பாடிய திருமந்திரம் சித்தர் இலக்கியங்களில் முதன்மையான நூலாகும்.*
* *3000 பாடல்கள் இயற்றினார் என்றும் 3000 ஆண்டுகள் வாழ்ந்தார் என்றும் கூறப்படுகிறது*
* *இவரை திருமூல நாயணார் என்றும் அழைப்பர்*
* *ஒன்றே குலம் ஒருவனே தேவன்*
* *யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்*
* *உள்ளம் பெருங்கோயில் ஊடனும் ஆலயம்*

*போன்ற புகழ்மிக்க வரிகளைப் பாடியவர். இவர்பாடிய பாடல்கள் பத்தாம் திருமுறையில் தொகுக்கப் பட்டுள்ளது.*

## 2. சிவ வாக்கியார்

* *பதினென் சித்தர் ஞானக் கோவை என்னும் நூலில் இவரது பாடல்கள் முதலில் இடம் பெற்றுள்ளன.*
* *இவர் பாடிய பாடல்கள் 520 ஆகும்.*

* *காலம் கி.பி 10 - ஆம் நூற்றாண்டு*
* *நமச்சிவாய எனும் மந்திரச் சொல்லை*
* *ஆன அஞ்செழுத்துக்களே அண்டமும் அகண்டரும்*
* *ஆன அஞ்செழுத்துக்களே ஆதியான மூவரும்"*
* *என்றும் அழகுற எளிமையாகப் பாடுகின்றார்.*

### 3. பாம்பாட்டிச் சித்தர்

* *பாண்டிய நாட்டில் பிறந்த இவர் கொங்கு நாட்டிலுள்ள மருத மலையில் வாழ்ந்தார் என்பர்.*
* *பாம்பினை ஆட்டி வைக்கும் பாம்பாட்டி போல் தகுதிக்கு மேல் ஆடும் மனிதர்களின் நிலையாமையை இடித்துரைத்துப் பல பாடல்களைப் பாடியுள்ளதால் பாம்பாட்டிச் சித்தர் என்றழைக்கப் படுகிறார்.*
* *இவர் பாடிய பாடல்கள் 129 ஆகும்*
* *இவர் பாடலில் பாம்பாகிய குண்டலினி சக்தியை இவர் எழுப்புவதாலும் இவரைப் பாம்பாட்டிச் சித்தர் என்று அழைக்கின்றனர்.*

**ஊத்தைக் குழிதனிலே மண்ணை எடுத்தே**
**உதிரப் புனலிலே உண்டை சேர்த்தே**
**வாய்த்த குயவனார் அவர் பண்ணும் பண்டம்**
**வறையோட்டுக்கும் ஆகாதென்று ஆடுபாம்பே**

*என்று மண்பாண்ட ஓட்டிற்கு உவமை கூறுகிறார்.*

### 4. அகப்பேய்ச் சித்தர்

* *அலைபாயும் மனதினை பேய்க்கு உவமை படுத்திப் பாடியதால் இவர் அகப்பேய்ச் சித்தர் என அழைக்கப்பட்டார்.*

**"நஞ்சுண்ண வேண்டாமே அகப்பேய்**

*என்றும்*

**"ஆரலைத் தாலும் நீரலை யாரேடி**
**ஊரலைந் தாலும் ஒன்றையும் நாடாதே"**

*என்று பாடியவர்*

### 5. அழுகுணிச்சித்தர்

* *இவரை அழகணிச் சித்தர் என்று அழைப்பர். பாமர சொல்லாடல் மரபில் அழகுணிச் சித்தர் என்றும் அழைப்பர்.*

* *இவரின் பாடல்கள் அனைத்தும் அழகும் அணிநலமும் மிகுந்து காணப்படுவதால் இவர் அழகணிச் சித்தர் என்றழைக்கப்ள படுகிறார்.*

**பையூரிலே இருந்து பாழூரிலே பிறந்து**
**மெய்யூரிலே போவதற்கு வேதாந்த வீடறியேன்**
**மெய்யூரில் போவதற்கு வேதாந்த விடறிந்தால்**
**பையூரும் மெய்யூரும் என் கண்ணம்மா பாழாய் முடியாமோ?**

*என்று பாடுகிறார்*

## 6. இடைக் காட்டுச் சித்தர்

* *இடைக்காடு என்னும் ஊரில் பிறந்தவர்*
* *கொங்கணச் சித்தரின் சீடர் இவர்*
* *காலம் கி.பி 15 - ஆம் நூற்றாண்டு*
* *இடையர்களையும், ஆடுமாடுகளையும் முன்னிறுத்திப் பாடியதால் இவரை இடைக் காட்டுச் சித்தர் என்று அழைக்கிறார்கள்.*

**“முக்திக்கு வந்தானேன் - பசுவே!**
**மூலப்பொருளானேன்**
**சத்திக்கு உறவானேன் - பசுவே**
**தன்னைத் துதிப்பாயே”**

*என்று பாடுகிறார்*

## 7. குதம்பைச் சித்தர்

* *‘குதம்பை’ என்னும் சொல் ‘காதணியை’ குறிக்கும்*
* *குதம்பை என்றும் காதணி அணிந்த பெண்களைக் ‘குழம்பாய்’ என்று விதித்துப் பாடியதால் குதம்பைச் சித்தர் என்றழைக்கப் பட்டார்.*
* *இவர் பாடிய பாடல்கள் 32 ஆகும்*
* *மெய்ப்பொருள் ஒன்றே கைப்பொருள் மற்றவையெல்லாம் பொய்ப்பொருள் என்பது இவரின் கொள்கை.*

**“மாங்காய்ப் பாலுண்டு மலைமேல் இருப்பவர்க்குத்**
**தேங்காய் பால் எதுக்கடி - குதம்பாய்**
**தேங்காய்பால் எதுக்கடி”**

*என்று பாடியுள்ளார்.*

## 8. கடுவெளிச் சித்தர்

* ‘கடு’ என்ற சொல்லுக்குப் ‘பெரிய’ என்று பொருளாகும். கடுவெளி என்பது பரந்த பெருவளி ஆகும்.
* பரந்த மனதினைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பாடல் பாடியதால் கடுவெளிச் சித்தர் என்று அழைக்கப்பட்டார்
* இவர் பாடிய பாடல்கள் 34 கண்ணிகள்
* காலம் கி.பி. 15 - ஆம நூற்றாண்டு

**நந்த வனத்தில் ஓர் ஆண்டி அவன்**
**நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி**
**கொண்டு வந்தான் ஒரு தோண்டி - அதைத்**
**கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி”**

என்ற பாடலைப் பாடியவர்.

## 9. போகர்

* இவர் திருமூலரின் மாணவரான காலங்கிநாதரின் மாவணவர் ஆவார்.
* பழனி மலையில் வாழ்ந்ததாகக் கூறுவர்
* இவர் போகர் ஏழாயிரம், நிகண்டு, பதினேழாயிரம் சூத்திரம் எழுநூறு போகத் திருமந்திரம், போகர் நிகண்டு, போகர் மருத்துவம் போன்ற நூல்களை இயற்றியுள்ளார்.

## 10. சட்டை முனி

* இவர் போகரின் மாணவர் ஆவார்
* சட்டை முனிஞானம், கலம்பகம்நூறு
* ஞானநூறு, வாத நிகண்டு போன்ற நூல்களை இயற்றி உள்ளார்.

## 11. உரோம முனி

* இவர் சட்டை முனி வாழ்ந்த காலத்தைச் சார்ந்தவர் என்பர்
* இவரின் உடல் முழுவதும் உரோமங்கள் மிகுதியாக இருந்ததால் உரோம முனி என்றழைக்கப்பட்டார்.
* இவர் உரோமமுனி நூறு, உரோமமுனி ஐந்நூறு, ஐம்புல நூல் ஆகிய நூல்களைப் பாடி உள்ளார்.

## 12. கொங்கணச் சித்தர்

* இவர் கொங்கு நாட்டைச் சார்ந்த ஊதியூர் மலையில் வாழ்ந்தார்.

* *காலம் கி.பி 7 - ஆம் நூற்றாண்டு என்பர்*
* *இவர் இரசவாதம், யோகம், குரை வாகடம் முதலிய நூல்களை இயற்றியவர்.*

**கற்புள்ள மாதர்குலம் வாழ்க நின்ற கற்பனை யளித்தவரே வாழ்க''**
*என்றும்*

**''கண்டதும் கேட்டதும் சொல்லாதே கண்ணில்**
**காணாத உத்தரம் விள்ளாதே**
**பெண்பாட்டிக்கு உற்றது சொல்லாதே பெற்ற**
**பிள்ளைக்கு இளப்பம் கொடுக்காதே''**

*போன்ற பாடல்களைப் பாடியவர்*

## 13. கருவூர்ச் சித்தர்

* *கருவூரில் பிறந்தவர்*
* *கருவூரில் பிறந்தவராதலால் இவர் ருவூர்த்தேவர் என்றழைக்கப் படுகிறார்*
* *தஞ்சாவூரில் இராசராசன் கட்டிய கோயிலின் சிவலிங்கத்தை இவர் நிறுவினார்.*

## 14. பட்டினத்தார்

*பட்டினத்தார் என்றும் பட்டினத்தடிகள் என்றும் கூறப்படும் இச்சித்தர் சோழர் காலத்தில் வாழ்ந்தவர் ஆவார். காவிரிப் பூம் பட்டினத்தில் வணிகம் செய்த வணிகர். உலக வாழ்வின் நிலைமையைப் பொருளைக் கண்டு துறவு பூண்டவர். இவர் பாடிய பாடல்கள் அனைத்தும் பதினோராம் திருமுறை தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.*

1. *கோயில் நான்மணிமாலை*
2. *திருக்கழுமல மும்மணிக்கோவை*
3. *திரு ஏகம்பர முடையார் திருவந்தாதி*
4. *திருவிடை மருதூர் மும்மணிக்கோவை*
5. *திருவெற்றியூர் ஒருபா ஒருபஃது*

## 15. பத்திரசிரியார்

* *துருவ நாட்டு மன்னர் பட்டினத்தாரைக் கழுவேற்ற முயற்சியில் தோல்வியடைந்தார்.*
* *முயற்சியில் தோற்றக் காரணத்தால் பட்டினத்தாருக்கே அடிமையாகி அரச இன்பத்தைத் துறந்தார்.*

* *இவர் பாடிய பாடல்கள் அனைத்தும் பத்திரசிரியர் புலம்பல் என்று அழைக்கப்படுகிறது.*

**“பேய்போல் திரிந்து பிணம்போல் கிடந்து பெண்களைத்**
**தாய்போல் நினைத்துத் தவம் முடிப்பது எக்காலம்?”**

*என்னும் பாடல் வரிகள் மூலம் பெண்களின் மாண்பை போற்றுவதை அறிந்து கொள்ள இயலும்.*

## 16. தேரையர்

* *அரசனின் தலைக்குள் இருந்த தேரையை அகற்றியதால் இவருக்குத் ‘தேரையர்’ என்று பெயர் பெற்றார்.*
* *இவர் அணுகாவிதி, பதார்த்த குண சிந்தாமணி, வைத்திய சிந்தாமணி, கலைஞானம் முதலான நூல்களை இயற்றியுள்ளார்.*

## 17. அகத்தியர்

* *தமிழகத்தில் வாழ்ந்த அகத்தியர் பலர்*
* *இந்த அகத்தியர் சித்தர் மரபினர்*
* *அகத்தியர் சித்த மருத்துவ முறைகளை*
* *வகுத்தவர்களுள் முதன்மையானவராகக் கருதப்படுகிறார்.*

## 18.சுப்பிரமணிய சித்தர்

*சுப்பிரமணிய சித்தர் அகத்தியருக்கு ஞானம் அளித்த குரு என்பர். இவர் சுப்பிரமணிய ஞானம் என்ற நூலை இயற்றியுள்ளார்.*

## இராவண காவியம்

*இருபதாம் நூற்றாண்டில் தமிழ்மொழியில் எழுதப்பெற்ற காப்பியங்களில் ஒன்றாகும். திராவிட இயக்கத்தின் தாக்கத்தால் இக்காப்பியம் இயற்றப்பட்டது. இராவணனையும், அவரைச் சார்ந்தோர் களையும் போற்றிப் புகழும் படியும், இதிகாச இராம, இலக்குவனனைத் தூற்றும் விதமாகவும் இக்காப்பியம் அமைந்துள்ளது. இக்காப்பியம் வால்மீகி, கம்பர், துளசிதாசர் உள்ளிட்டோர் எழுதிய இராமயணங்களில் உள்ள செய்திகளை அடிப்படையாகக் கொண்டு, இராவணனைத் தமிழ்க் கதாநாயகனாகச் சித்தரித்து இயற்றப்பட்டு உள்ளது.*

| | | |
|---|---|---|
| *நூல்பெயர்* | : | *இராவணகாவியம்* |
| *நூலாசிரியர்* | : | *புலவர் குழந்தை* |
| *காலம்* | : | *கி.பி இருபதாம் நூற்றாண்டு (1.7.1906)* |
| *தாய் தந்தையர்* | : | *முத்துச்சாமிக் கவுண்டர் - சின்னம்மையார்* |

| | | |
|---|---|---|
| பாடல்கள் | : | 3100 |
| பாவகை | : | விருத்தப்பா |
| காண்டங்கள் | : | ஐந்து |
| | | 1. தமிழ்க் காண்டம் : 8 படலங்கள் |
| | | 2. இலங்கைக்காண்டம் : 8 படலங்கள் |
| | | 3. விந்தக்காண்டம் : 11 படலங்கள் |
| | | 4. பழிபுரி காண்டம் : 12 படலங்கள் |
| | | 5. போர்க் காண்டம் : 18 படலங்கள் |
| | | 57 படலங்கள் |

குண்டலகேசிக்கு மறுப்பு நூலாக நீலகேசி இயற்றப்பட்டது போல தமிழ்க் காப்பியமான கம்பராமாயணத்திற்கு மறுப்பாக இக்காப்பியம் இயற்றப்பட்டது.

### கதைச் சுருக்கம்

இரண்டாம் கடல்கோளுக்குப் பிறகு இலங்கையில் வச்சிரவாவு என்ற மன்னர் தமிழகத்தையும் சேர்த்து ஆட்சி செய்தார். அவரின் மனைவி கேசரி. இவர்களுக்குப் பிறந்த குழந்தையே இராவணன் தந்தையாரின் மரணத்திற்குப் பிறகு தமிழகத்தை ஆண்ட இராவணன் வண்டார் குழலியைத் திருமணம் செய்தான். வட நாட்டிலிருந்து தமிழகத்தின் வடக்குப் பகுதியில் ஆரியர்கள் வந்து குடியமர்ந்தனர். இதை இடைவள நாட்டை ஆண்ட தமிழரசியான தாடகை எதிர்த்தாள். இராவணன் மூலம் அவர்களை எதிர்க்கச் சொன்னாள் அங்கு நடைபெற்ற யாகத்தினை சுவாகு என்னும் படைத்தளபதி தடுத்து நிறுத்தினார். வேள்வி தடைபெற்றதால் விசுவாமித்திரர் அயோத்திக்குச் சென்று கிராம, இலக்குவணனை அழைத்து வந்து தாடகை, சுவாகு போன்றோரைக் கொன்றார். இதனால் கோபமுற்ற இராவணன் சீதையை கவர்ந்து இலங்கையில் தன் தங்கையைப் போல் போற்றினார். பின்னர் நடைபெற்ற போரில் கும்ப கர்ணன், இராவணன் கொல்லப்பட்டனர்.

இக்காப்பியத்தில் இராவணன் வாழ்க்கையில் இடையூறு செய்வதைப் போலவே இராமன் சித்திரிக்கப்படுகிறான். இராவணனுக்கும் வண்டார் குழலிக்கும் நடைபெற்ற திருமணம் சீர்திருத்தத் திருமணம் போலவே பாடப்பட்டுள்ளது. இக்காப்பியம் தமிழ்த் தேசிய உணர்வுக் காப்பியம் என்று போற்றப்படுகிறது. இந்நூல் கி.பி 1948 - இல் தடைசெய்யப்பட்டு, மீண்டும் திராவிட ஆட்சியில் 17.05.1971 - இல் தடை நீக்கம் செய்யப்பெற்றது குறிப்பிடத் தக்கதாகும்.

## அலகு - 2

## சங்க இலக்கியம்

# 1. நற்றிணை

எட்டுத் தொகை நூற்களுள் முதலில் வைத்துப் போற்றப்படும் நூல் நற்றிணையாகும். நல் + திணை = நற்றிணை 'திணை' என்ற சொல்லுக்கு 'ஒழுக்கம்' என்று பொருள். நல்ல ஒழுக்கங்களை எடுத்துச் சொல்லும் பாடல்கள் என்று பொருள். டாக்டர் ந.சஞ்சீவி அவர்கள் ஐங்குறுநூறு குறுந்தொகை போன்று குறைவான அடிகளும் இன்றிப் பரிபாடல், பதிற்றுப்பத்து போன்ற நீண்ட அடிகளும் இன்றி இடை நிகரவான அடிகளைக் கொண்டிருப்பதால் 'நற்றிணை' என்று பெயர் வந்திருக்கலாம் என்கிறார்.

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | நற்றிணை |
| திணை | : | அகத்திணை |
| பாடிய புலவர்கள் | : | 175 பேர் |
| பாடல்களின் எண்ணிக்கை | : | 400+1 |
| பா வகை | : | ஆசிரியப்பா |
| அடிவரையறை | : | 9 முதல் 12 வரை |
| தொகுத்தவர் | : | பெயர் தெரியவில்லை |
| தொகுப்பித்தவர் | : | பன்னாடு தந்த மாறன் வழுதி |

### பாடல் - 1

### குறிஞ்சித்திணை

**பாடியவர்** - கபிலர்

**திணை** - குறிஞ்சித் திணை

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சித் திணை ஆகும்.

**துறை**

பிரிவினை உணர்த்திய தோழிக்குத் தலைவி சொல்லியது.

## துறை விளக்கம்

*பொருள் தேடுவதற்குக் காரணமாகத் தலைவன் பிரிந்து செல்வதை அறிந்த தோழி அதனைத் தலைவியிடத்து எடுத்துச் சொன்னாள். தலைவியின்பால் வரும் துன்பத்திற்கு அஞ்சினாள் தோழி. தலைவனிடம் சென்று தன் வருத்தத்தைக் கூறினாள். அதற்குத் தலைவி என்னை விட்டுப் பிரிகின்ற குணக்குறைபாடு இல்லாதவர் என் தலைவர் என்று புகழ்ந்து கூறுவது ஆகும்.*

## இனிமை உடையவர்

1) ''நின்ற சொல்லர்; நீடுதோன்று இனியர்;
என்றும் என்தோள் பிரிவு அறியலரே;
தாமரைத் தண்தாது ஊதி, மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீம் தேன்போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை;
நீர்இன்று அமையா உலகம் போலத்
தம்இன்று அமையா நந்நயந்தருளி
நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமைஉறுபவோ? செய்பு அறியலரே -கபிலர்

## பாடல் பொருள்

*தோழியே! நம்முடைய தலைவர் என்றுமே நிலைபெற்ற சொல்லினைச் சொல்லும் வாய்மையினை உடையவர். நெடியதாகத் தோன்றும் இனிமையினை உடையவர். எப்பொழுதும் என் தோள்களை விட்டுப் பிரிதல் என்பதை அறியாத சிறந்த பண்பினை உடையவர். அத்தகைய சிறப்புடையவரின் நட்பு எப்படிப்பட்டது என்றால் தாமரை மலரின் குளிர்ந்த மகரந்தங்களை எடுத்து தேனீக்கள், அதன்பிறகு உயர்ந்து நிற்கும் சந்தன மரங்களின் மகரந்தங்களையும் எடுத்து, அந்த மரத்தின் உயர்ந்த இடத்தில் கொண்டு வைத்த தேனின் சுவை போன்ற உறுதியாக உயர்ந்தது ஆகும்.*

*நீரின்றி இந்த உலகம் எங்ஙனம் செயல்படாதோ அதுபோல அவரின்றி இவ்வுலகில் நாம் இல்லை. நம்மீது மிகவும் விருப்பம் கொண்டவர் அவர். அவர் நம்மை விட்டுப் பிரிந்தால் நம் நெற்றியில் பசலை படரும். அவ்வாறு பசலை படர்வதற்கு அஞ்சி அவர் தடுமாற்றம் அடைவாரோ? எனில் அடையமாட்டார்.*

## 2. குறுந்தொகை

எட்டுத்தொகை நூல்களுள் ‘நல்ல குறுந்தொகை’ என்ற அடை மொழியைப் பெற்ற நூல். குறுகிய அடிவரையறையை உடைய நூல் ஆதலால் குறுந்தொகை என்னும் பெயர் பெற்றது. உரையாசிரியர் களால் மிகுதியாக மேற்கோள் காட்டப்பட்ட நூல் குறுந்தொகையாகும். தொகை நூல்களுள் முதலில் தொகுக்கப்பட்ட நூல் குறுந்தொகையாகும்.

| | | |
|---|---|---|
| நூல்பெயர் | : | குறுந்தொகை |
| பாடலாசிரியர்கள் | : | 205 பேர் |
| பா | : | ஆசிரியப்பா |
| திணை | : | அகத்திணை |
| பாடல்கள் | : | 400 + 1 |
| அடி வரையறை | : | 4 அடிமுதல் 8 அடிவரை |
| தொகுத்தவர் | : | பூரிக்கோ |
| தொகுப்பித்தவர் | : | பெயர் தெரியவில்லை |
| சிறப்புப் பெயர் | : | குறுந்தொகை நானூறு |

எட்டுத்தொகை நூல்களுள் வருணனைகளும், கற்பனைகளும் குறைவாகக் காணப்படும் நூல் குறுந்தொகையாகும். தமிழரின் பழம் பண்பாடுகளையும், வாழ்வியல் கூறுகளையும் எடுத்துக் கூறும் நூல் குறுந்தொகையாகும்.

### 1) குறிஞ்சி

1. யாயும் ஞாயும் யார் ஆகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல் நீர்போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே

-செம்புலப் பெயனீரார்

**திணை:** குறிஞ்சித் திணை = மலையும் மலைசார்ந்த இடமும்

2. “நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;
நீரினும் ஆர்அளவின்றே - சாரல்
கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.”

**பாடியவர்** : *தேவகுலத்தார்*

**திணை** : *குறிஞ்சி*

**துறை** : *தலைமகன் சிறைப்புறமாக, அவன் வரைந்து கொள்வது வேண்டித் தோழி இயற் பழித்தவழித் தலைமகள் இயற்பட மொழிந்தது.*

*குறிஞ்சித் திணையில் அமைந்தது இப்பாடல். தலைவியை திருமணம் செய்து கொள்ளாது களவு வாழ்க்கையில் ஒழுகி வருபவனாகியத் தலைவன் வேலிப்புறத்தே வந்து நின்றதைத் தோழி அறிந்தாள். அவன் தலைவியை விரைவாகத் திருமணம் செய்துகொள்ள வேண்டு மென்பதை அவனுக்கு அறிவுறுத்த நினைக்கிறாள். அதன் பொருட்டு அவன் செவியிற்படுமாறு, அவனது நட்பைப் பழித்துப் பேசியதை தலைவி கேட்கிறாள். தலைவனோடு நமக்குள்ள நட்பே சிறப்புடைய தென்று தோழிக்கு தலைவி உரைக்கிறாள்.*

## பாடற் பொருள்

*தோழி! மலைப் பக்கத்திலுள்ள கரிய கொம்புகளையுடைய குறிஞ்சி மரத்தின் மலர்களைக் கொண்டு பெரிய தேனை வண்டுகள் செய்தற்கு இடமாகிய நாட்டினையுடைய தலைவனோடு நான் கொண்ட நட்பானது,*

*சொல்லப் போனால் நிலத்தைக் காட்டினும் அகலத்தாற் பெரியதாகும். வானைக் காட்டினும் உயர்ச்சியால் உயர்ந்ததாகும். உள்ளே சென்று எல்லை காண நினைத்தால் கடல்நீரைக் காட்டினும் ஆழமானது ஆகும். நீ அறிவாயாக! என்று தோழியைப் பார்த்து சொல்கிறாள்.*

## பாடல் நயம்

*நாடனொடு செய்த நட்பானது பெரியது, உயர்ந்தது, ஆழமுடையது எனக்கூறி அந்த நட்பு சிறந்ததெனக் கூறுகிறாள்.*

# 3. ஐங்குறுநூறு

## மருதம் (வேட்கைப்பத்து)

“வாழி ஆதன், வாழி அவினி!
நெற்பல பொலிக! பொன்பெரிது சிறக்க!
எனவேட் டோளே யாயே யாமே
நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்
யாண ஞரன் வாழ்க!
பாணனும் வாழ்க! வெனவேட் டேமே”

***பாடலாசிரியர்:*** *ஓரம்போகியார்*

***திணை*** : *மருதம்*

### கூற்று

*பரத்தையர் கூட்டுறவில் நெடுநாள் வாழ்ந்த தலைமகன் தன் பிழையுணர்ந்து தன் மனைவியை மீண்டும் கூடினான். அப்போது தோழியை நோக்கி, யான் உங்களைப் பிரிந்து வாழும் நாட்களில் நீங்கள் யாது நினைத்திருந்தீர்கள்? என வினவினான். அதற்கு விடையாகத் தோழி கூறியது.*

*வேட்கைப்பத்து - இஃது அன்பின் ஐந்திணைகளில் அன்பு நெறியின் பாற்படும் களவு, கற்பு என்னும் இருவகை ஒழுக்கத்திலும் ஈடுபட்ட தலைமகன் அவ்ஒழுக்கத்தில் இருந்து பிரிந்து, தலைமகளும் தோழியும் ஒழுகிய திறம் வேட்டு, தோழியோடு சொல்லாடி வினவியவழி தோழி தலைமகளின் வேட்கைத்திறமும், தன் வேட்கைத் திறமும் கூறுதற் பொருளாக வரும் பாட்டுக்களின் தொகுதி வேட்கைப்பத்து ஆகும்.*

### கூற்று விளக்கம்

*புற ஒழுக்கத்திலே நெடுநாள் ஈடுபட்ட பின் “இது தகாது” எனத் தெளிந்த மனத்தினாய் மீண்டும் தலைவியோடு கூடி ஒழுகிநின்ற தலைமகன் தோழியோடு சொல்லாடி, யான் அவ்வாறு ஒழுக நீவீர் நினைத்த திறம் யாது? எனக் கேட்டதற்கு, தோழி சொல்லியது.*

## பாடற்பொருள்

*தலைவ! என் மன்னனாகிய ஆதன் வாழ்க! அவன் குடியிற் பிறந்த அவினி வாழ்க! விருந்தினருக்கு உணவு கொடுத்தற் பொருட்டு வயல்களில் நெல் அதிகமாக விளைக! ஈதல் பொருட்டு பொன்மிகுதியாக உண்டாகுக என்று தலைவி இல்லறத்திற்கு வேண்டும் நிகழ்வுகளைத் தவிர வேறொன்றையும் அவள் நினைக்கவில்லை. நாங்கள் பூக்களை மிகுதியாக உடைய புன்னை மரங்களும், முட்டைகளை மிகுதியாகக் கொண்ட சிறுமீன்களுடைய ஊரன் வாழ்க! அதற்குக் காரணமான பாணன் மகனும் வாழ்க என்று விரும்பி வாழ்ந்தோம்.*

## 4. கலித்தொகை

*எட்டுத்தொகை நூற்களில் 'கற்றறிந்தார் ஏத்தும் கலி', 'கல்வி வலார் கண்ட கலி' என்று அடைமொழியைப் பெற்ற நூல். 'பா' வகையினால் பெயர் பெற்ற நூல். தொல்காப்பிய மரபுப்படி அகத் திணையைப் பற்றிப் பாடும் ஒரே அகத்திணை நூல் என்ற சிறப்பிற் குரியது. ஐந்திணைகளையும் ஐந்து புலவர்கள் பாடியுள்ளனர் பெரும்பாலான பாடல்கள் ஓரங்க நாடக வகையைச் சார்ந்தது ஆகும்.*

| | | |
|---|---|---|
| *நூல் பெயர்* | : | *கலித்தொகை* |
| *திணை* | : | *அகத்திணை* |
| *பாடல் ஆசிரியர்கள்* | : | *5 பேர்* |
| *பாடல்கள்* | : | *149+1=150* |
| *அடி வரையறை* | : | *11 முதல் 80 அடிகள் வரை* |
| *தொகுத்தவர்* | : | *நல்லந்துவனார்* |
| *தொகுப்பித்தவர்* | : | *பெயர் தெரியவில்லை.* |

### தலைவிகூற்று

சுடர்தொடிஇ! கேளாய்! தெருவில் நாம் ஆடும்
மணற்சிற்றில் காலின் சிதைபட, அடைச்சிய
கோதை பரித்து வரிப்பந்து கொண்டு ஓடி
நோதக்க செப்பும் சிறுபட்டிமேல் ஓர்நாள
அன்னையும் யானும் இருந்தோம்! இல்லீரே!
உண்ணுநீர் வேட்டேன் என வந்தாங்கு அன்னை
அடர்பொற் சிரகத்தால் வாங்கி, சுடரிழாய்!
உண்ணுநீர் ஊட்டிவா என்றாள், என யானும்
தன்னை அறியாது சென்றேன், மற்று என்னை
வளைமுன் கைபற்றி நலீய தெருமருந்திட்டு
அன்னாய்! இவன் ஒருவன் செய்தது காண்! என்றேனா
அன்னை அலறிப் படர்தர தன்னை யான்
உண்ணுநீர் விக்கினான் என்றேனா அன்னையும்
தன்னைப் புறம்பு அழித்து நீடை மற்று என்னைக்
கடைக்கண்ணால் கொள்வான் போல் நோக்கி நகைக் கூட்டம்
செய்தான் அக்கள்வன் மகன்.

**கூற்று**

**கூற்று விளக்கம்**

## பொருள்

*ஒளி பொருந்திய வளையினை அணிந்தவளே' ஈதொன்னைக் கேளாய்! நம் தெருவிடத்தினில் நாம் சிற்றில் இழைத்து, உணவு சமைத்து விளையாடும் போது மணலால் செய்த சிற்றிலைக் காலால் சிதைத்தும் கூந்தலிலே சூட்டியிருந்த நறுமண மாலையை அறுத்தும் வரிகளை யுடைய பந்தை எடுத்துக் கொண்டு ஓடியும் நாம் வருந்தத்தக்க செயல்களைச் செய்தான் சிறியனாகிய காவலின்றி வளர்ந்தவன்.*

*முன்பு ஒரு நாள் அன்னையும் யானும் வீட்டில் இருந்தோம்! அப்போது வீட்டிலுள்ளோரே நான் உண்ணும் நீர் விரும்பி வந்துள்ளேன் எனக் கூறி வந்தான். அன்னையும் சுடரிழாய் பொன்னாற் செய்த கரகத்தால் உண்ணுதற்கான நீரை வார்த்து நீ உண்ணச் செய்து வருவாய் என்று சொன்னாள். நானும் சிறுபட்டியாகிய அவன் என்று அறியாமல் சென்றேன். நீர் உண்பிக்கச் சென்ற போது அவன் என்னுடைய வளையணிந்த முன்கையினைப் பிடித்து என்னை நலிவித்தான். நான் மருண்டு போய் அன்னையே! இவன் ஒருவன் செய்த செயலினைப் பாராய்! என்றேன். தாயும் உடனே அலறித் துடித்து அங்கே வந்தனள். அவன் செய்ததை மறைத்து "நான் உண்ணுநீர் விக்கி வருந்தினன் என்று பொய் கூறினேன்! உடனே தாயும் அவன் முதுகை பலமுறை அழுத்தமாகத் தடவினள் பின்னர் என்னைத் தன் கடைக் கண்களால் கொல்வான் போலே பார்த்துத் தன் மன மகிழ்ச்சியைத் தரும் கூட்டத்தை அக்கள்வனாகிய மகன் செய்தான். இது தான் நிகழ்ந்தது என்று தோழியிடத்துத் தலைவி கூறினள்.*

## 5. புறநானூறு

*எட்டுத்தொகை நூற்களில் புறத்திணை பற்றிப் பேசும் நானூறு பாடல்களின் தொகுப்பே புறநானூறு ஆகும். பழந்தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டியர், குறுநில மன்னர்கள், புலவர்கள் பற்றிக் கூறும் வரலாற்றுப் பெட்டகம் ஆகும். பழந்தமிழர்களின் போர்க்கள வாழ்வியல் நெறிமுறைகளையும், போர் நெறிமுறைகளையும் வாழ்வியல் விழுமியங்களையும் எடுத்துக் கூறும் நூல்.*

| | | |
|---|---|---|
| *நூல் பெயர்* | : | *புறநானூறு* |
| *பாடிய புலவர்கள்* | : | *157 பேர்* |
| *பா* | : | *ஆசிரியப்பா* |
| *திணை* | : | *புறத்திணை* |
| *பாடல்கள்* | : | *400* |
| *அடி வரையறை* | : | *4 முதல் 40 வரை* |
| *தொகுத்தவர் தொகுப்பித்தவர்* | : | *பெயர் தெரியவில்லை* |
| *சிறப்புப் பெயர்கள்* | : | *புறம், புறப்பாட்டு, புறம்பு நானூறு* |
| *கடவுள் வாழ்த்துப் பாடியவர்* | : | *பாரதம் பாடிய பெருந்தேவனார்* |
| *சிறப்பு* | : | *ஒவ்வொரு பாடலின் இறுதியிலும், திணை, துறை, பற்றிய விளக்கங்கள் குறிக்கப்பட்டுள்ளது.* |

தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருகை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓர்ஒக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்போம் எனினே தப்புந பலவே

- மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர்.

**திணை :**

**துறை :**

2. நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே - ஔவையார்

**திணை :**

**துறை :**

## பாடல் பொருள்

1. *இவ்வுலகம் தெளிந்த கடல் நீரால் சூழப்பட்டதாகும். இவ்வுலகம் முழுவதையும் ஒரு குடையின் கீழ்த் தனதாக்கி ஆட்சி செய்பவன் மன்னன் ஆவான். அப்படிப்பட்ட அரசனுக்கும் நள்ளிரவிலும், பகற் பொழுதிலும் உறங்காமல் விரைந்தோடும் விலங்குகளை வேட்டையாடி வீழ்த்த எண்ணுகின்ற கல்வி அறிவில்லாத ஒருவனுக்கும் உண்ணத் தேவைப் படும் பொருள் நாழியளவே ஆகும். உடுத்தக்கூடிய உடை மேலாடை ஒன்றும், இடுப்பில் கட்டும் ஆடையும் ஆகிய இரண்டே ஆகும். மற்றவை எல்லாமும் இவ்வாறாகவே அமையும். ஆகவே ஒருவன் செல்வத்தால் அடையக்கூடிய பயன் அதனை மற்றவர்களுக்கும் கொடுத்து மகிழ்வதாகும். அவ்வாறின்றித் தானே நுகர்வோம் என்று எண்ணினால், பலவற்றை அவன் இழக்க நேரிடும்.*

2. *நாடாக இருந்தாலும், காடாக இருந்தாலும், தாழ்ந்த நிலமாக இருந்தாலும், மேடான நிலமாக இருந்தாலும் எந்த இடத்தினில் ஆடவர் நல்லவர்களாக வாழ்கின்றார்களோ, அவ்விடத்தில் மேன்மை பெற்றுத் திகழ்வாய் நிலமே! என்று ஔவையார் நிலத்தை வாழ்த்திப் பாடுகின்றார். ஆண்களின் பண்பு நலத்தினால் மட்டுமே நிலத்தின் பண்பு சிறக்கும் என்பதே இப்பாடல் கருத்தாகும்.*

# முல்லைப்பாட்டு

* முல்லைப்பாட்டு என்பதன் பொருள், முல்லைத் திணையைப் பற்றிக் கூறும் ஆசிரியப்பாட்டு என்பதாகும்.
* முல்லை என்பது முல்லைத்திணையைக் குறிக்கிறது.
* முல்லைத்திணையின் ஒழுக்கமாகிய ஆற்றியிருத்தலைக் குறிக்கிறது.
* 'இல் இருத்தல் முல்லை' என்ற மரபின்படி பாடப்பட்ட நூல் ஆகும். வினையின் காரணமாகப் பிரிந்து சென்ற தலைவன் இல்லம் திரும்பும் வரையில் இல்லின் கண் பிரிவுத் துயரை ஆற்றியிருத்தல் என்பது இதன் பொருளாகும்.

## நூல் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| திணை | : | அகத்திணை |
| திணை உட் பிரிவு | : | முல்லைத்திணை |
| பா | : | ஆசிரியப்பா |
| அடியெல்லை | : | 103 அடிகள் |
| பாடிய புலவர் | : | நப்பூதனார் |
| புலவர் மரபு | : | வணிக மரபு |
| சிறப்புப் பெயர் | : | நெஞ்சாற்றுப்படை, முல்லை |
| முதல் அடி | : | நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு |
| இறுதி அடி | : | வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே |

## நச்சினார்க்கினியர் விளக்கம்

இல்லறம் நிகழ்த்துவதற்குப் பிரிந்து வரும் துணையும் ஆற்றி இரு என்று கணவன் கூறிய சொல்லைப் பிழையாமல் ஆற்றி இருந்து, இல்லறம் நிகழ்த்திய இயற்கை முல்லையாம் என்பர்.

## நெஞ்சாற்றுப்படை விளக்கம்

தலைவனின் பிரிவை நினைத்து இல்லத்தில் துயில் கொள்ளாமல் தவிக்கும் நிலையினை,

'நெஞ்சாற்றுப்படுத்த நிறைதபு புலம்பொடு
நீடு நினைந்து தேற்றியும் ஓடுவளை திருத்தியும்;
மையல் கொண்டும் ஒய்யென உயர்த்தும்' (ப.பா. 81-83)

என்று தலைவனின் பிரிவுத்துயரை நினைத்து தன் நெஞ்சினை நிலைப்படுத்துவதால் இந்நூல் "நெஞ்சாற்றுப்படை" என்றழைக்கப் படுகிறது.

## நூல் அமைப்பு

| | | |
|---|---|---|
| 1-23 அடி வரை | - | தலைவியின் பிரிவுத்துயரம் |
| 24-28 அடி வரை | - | பாசறையில் தலைவனின் இருப்பு |
| 29-88 | - | யானைப் பாகரின் செயல் உள்பட பாசறை அமைப்பு |
| 89-99 அடிவரை | - | தலைவியின் துயரம் |
| 89-103 அடிவரை | - | வினை முடித்து வரும் தலைவன் திரும்பி வருதலும், மழைக்காலத்தின் தொடக்கமும் கூறப்பட்டுள்ளது. |

## நூல் சுருக்கம்

கார்காலம் தொடங்கியதும் வினை முடித்து திரும்பாத தலைவனை நினைத்து ஏங்கும் தலைவியின் வருத்தத்தைப் போக்கும் விதமாக ஆய்மகள்; தாயைப் பிரிந்த கன்றிடம் 'இன்னே வருகுநர் தாயர்' என்று சொன்ன நற்சொல் கேட்ட முதுபெரும் பெண்டிர் தலைவியிடம் சென்று தலைவனும் விரைவில் வந்துவிடுவான் என்று கூறினார்.

தலைவன் பாசறையில் தங்கியிருந்தான் யானைப்பாகர்கள் யானையினைப் பழக்கும் முறையினையும், பாசறையில் இரவில் ம்களிர் விளக்கேற்றியும், நெடிய அனுபவம் உடைய காவலர்கள் காவல் புரியும் தன்மையினையும், நாளிகைக் கணக்கர் பொழுதினை திட்டவட்டமாக அறிவித்தனர்.

பாசறையில் மிலேச்சர்கள் காவல் புரிந்தனர். தலைவன் பள்ளி யறையில் இருக்கும் நிலையில், பின்பு வினை முடித்து, திரைப்பொருள் களுடன் இல்லம் திரும்பும்போது, வழியில் காணும் இயற்கைக் காட்சிகளுடன் குதிரைகள் கனைக்கும் ஓசையைக் கேட்ட தலைவி மகிழ்வதும் கூறப்படுகிறது.

## சிறப்பியல்புகள்

* பழந்தமிழர்களின் விரிச்சி மற்றும் நற்சொல் கேட்டல் என்ற நம்பிக்கையை முல்லைப்பாட்டின் வழியே அறியலாம்.

"அரும்பவிழ் அலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப" (மு.பா.10-11)

என்றும்

"நன்னர் நன்மொழி கேட்டனம் அதனால்
நல்ல நல்லோர் வாய்ப்புள் தெவ்வர்" (மு.பா.17-18)

போன்ற அடிகள் வாயிலாக அறிய முடிகிறது

* பாசறையைக் காவல் புரியும் மிலேச்சர்களை வருணிக்கும் போது,

"உடம்பின் உரைக்கும் உரையா நாவின்
படம்புகு மிலேச்சர்"

என்று குறிப்பிடுகிறது.

* அரசனுக்குப் பாதுகாப்பு அரணாக விளங்கும் யவனர்கள் கண்களை இமை பாதுகாப்பது போல் பாதுகாக்கும் நிகழ்வினை 'வலி புணர் யாக்கை வன்கண் யவனர்' என்ற பாடல் வரி எடுத்துக் கூறுகிறது.

* அரசன் சென்ற காட்டு வழியின் இயல்பினை 'கானம் நந்திய செந்நிலப் பெருவழி' என்று அழகுற எடுத்துக் கூறுகிறது.

* காடுகளில் அழகிய மலர்கள் மலர்ந்திருப்பதைக்

"கோடல் குவிமுகை அங்கை அவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்ப"

என்று அழகுற விளக்குகிறது.

## அரிய கருத்துக்கள்

* பழந்தமிழர்களின் விரிச்சி கேட்டல், நற்சொல் கேட்டல் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

* வினைமுடித்து திரும்பும் வரை இல்லில் இருந்து தலைவனை எண்ணி வீட்டில் இருப்பது தலைவியின் சமூக மரபாகப் பின்பற்றப்பட்டது.

* பாசறையைப் பாதுகாக்க "பேச இயலாத வெளிநாட்டவரை பாதுகாப்பாளர்களாக அமர்த்தியதை எடுத்துக் கூறுகிறது.

## முல்லைப்பாட்டு நப்பூதனார்

## முல்லைப்பாட்டு - பொருட் சுருக்கம்

கார் காலம் தொடங்கிவிட்டது. மாவலி சக்கரவர்த்தி தாரை வார்த்துக் கொடுத்தபோது திருமால் பேருருவம் எடுத்ததுபோல், கடல்

நீரை முகந்து மலை முகடுகளை அடைந்த மேகம் பெருமழையைப் பெய்தது, குளிர்ந்த அந்தப் புன்மாலைப் பொழுதில் தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவியைப் பெருமுது பெண்டிர் தேற்றினர்.

அவர்கள், நிறைநாழி நெல்லையும் முல்லை மலரையும் தூவித் தெய்வத்தை வழிபட்டு நின்றனர். அப்போது, அருகில் ஓர் ஆயர்குலச் சிறுமி, கட்டப்பட்டிருந்த கன்றுகளை நோக்கிக் கூறிய சொற்கள், அவர்களது செவியில் விழுந்தன. கன்றுகளின் தாய்ப் பசுக்களை ஒட்டிக் கொண்டு கோவலர் இப்பொழுது வந்துவிடுவர் என்று அச்சிறுமி சொன்ன சொல்லை, நற்சொல் கேட்டதாக அவர்கள் மகிழ்ந்தனர். அவர்கள் அவ்விரிச்சியைக் கூறித் தேற்றியும் தலைவியின் கண்களில் கண்ணீர் அரும்பியபடி இருந்தது.

முல்லைக்காடு அழிக்கப்பட்டு அரசனின் பாடிவீடு அங்கே அமைக்கப்பட்டது. அங்குக் கூரை வேய்ந்த தெருக்கள் சந்திக்கும் இடங் களில் உள்ள யானைகள், சரிவரத் தழையை உண்ணாமல் நின்றன. அவற்றிற்கு வடமொழி கூறி, யானைப் பாகர் உணவு ஊட்டினர்.

பார்ப்பனர் முக்கோலில் தம் காவியுடையைத் தொங்கவிட்டது போல, வில்லை ஊன்றி அம்பறாத் தூணிகளை வீரர் தொங்கவிட்டிருந் தனர். அவ்விற்களெல்லாம் கட்டப்பட்டு வேல்கள் நடப்பட்டுக் கேடயங்கள் வரிசையாக வைக்கப்பட்டன.

அத்தகைய அரண்களில் தங்கிய பலவகைப்பட்ட படைகளுக்கு நடுவில், தலைவனுக்கென்று தனியே ஒரு பாசறை அமைக்கப்பட்டது. அங்கு, கச்சில் வாளினை உடைய மங்கையர் விளக்குகள் அவியும் தோறும் திரி இட்டு நெய்யூற்றிக் கொளுத்தினர்.

அந்நள்ளிரவில், மோசி மல்லிகை பூத்துக் கிடக்கும் சிறு தூறுகள் காற்றுக்கு அசைந்தாடுவதுபோல, வயதான முதுவீரர்கள் காவல் புரிந்தனர்.

நாழிகை வட்டிலைப் பார்த்து நாழிகைக் கணக்கர் அரசனிடம் நேரத்தை அறிவித்தபடி இருந்தனர்.

அரசன் தங்கியிருக்கும் இரண்டு அறைகளுடைய அவ்வில்லம், யவனர்களால் அலங்கரிக்கப்பட்டதாகும். அதன் உள்ளறையில் அரசன் படுத்திருந்தான். அரசனுக்குக் காவலாக ஊமையரான மிலேச்சர் இருந்தனர்.

முன்னாள்களில் நடந்த போரில், காயமுற்ற யானைகளையும், குதிரைகளையும், மடிந்த வீரர்களையும் பற்றிச் சிந்தித்தபடி உறங்காமற் கிடந்தான் அரசன்.

*மறுநாள், வெற்றியைப் பெற்ற அரசன், அன்றைய இரவில் இனிய உறக்கம் கொண்டான். ஆனால், தலைவனின் பிரிவால் வருந்தும் தலைவியோ, மாளிகையின் மேல் தூம்பிலிருந்து விழும் அருவியின் ஓசையைக் கேட்டபடி தனிமையிற் கிடந்தாள்.*

*அப்போது, மழையினால் செழித்த முல்லைக் காடு பின் செல்லும் படி வெற்றியோடு மீண்டுவரும் அரசனின் தேர்க் குதிரையின் காலடி ஓசை அவளது செவியில் ஒலிக்கிறது.*

## முல்லைப்பாட்டு

### நல்லோர் விரிச்சி கேட்டல்

நனந்தலை உலகம் வளைஇ, நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல், நிமிர்ந்த மாஅல் போலப்
பாடு இமிழ் பனிக்கடல் பருகி வலன் ஏர்பு,
கோடுகொண்டு எழுந்த கொடும் செலவு எழிலி

பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை,
அருங்கடி மூதூர் மருங்கிற் போகி,
யாழ் இசை இனவண்டு ஆர்ப்ப, நெல்லொடு,
நாழி கொண்ட நறுவீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய்க் கைதொழுது,
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப

### தலைவியைத் தேற்றுதல்

"சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றி(ன்)
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்குசுவல் அசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின் நின்று உய்த்தர,
இன்னேவருகுவர், தாயர்" என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம் அதனால்,
நல்ல நல்லோர் வாய்ப்புள் தெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருதல், தலைவர், வாய்வது; நீநின்
பருவரல் எவ்வம் களைமா யோய் எனக்
காட்டவும் காட்டவும் காணாள், கலுழ்சிறந்து,
பூப்போல் உண்கண் புலம்புமுத்து உறைப்ப

## பாசறையின் இயல்பு

கான்யாறு தழீஇய அகல்(ன்) நெடும் புறவில்,
சேண் நாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி,
வேட்டுப்புழை அருப்பம் மாட்டிக் காட்ட
இடுமுள் புரிசை ஏமுற வளைஇப்
படுநீர்ப் புணரியில் பரந்த பாடி

## யானைப் பாகனது செயல்

உவலைக் கூரை ஒழுகிய தெருவில்,
கவலை முற்றம் காவல் நின்ற
தேம்படு கவுள சிறுகண் யானை
ஓங்குநிலைக் கரும்பொடு, கதிர்மிடைந்து யாத்த,
வயல்விளை, இன்குள(கு) உண்ணாது, நுதல்துடைத்து
அயில்நுனை மருப்பில்தம் கையிடைக் கொண்டெனக்
கவைமுள் கருவியின், வடமொழி பயிற்றிக்
கல்லா இளைஞர், கவளம் கைப்ப

## வீரர்கள் தங்கும் படைவீடுகள்

கல்தோய்த்(து) உடுத்தப் படிவப் பார்ப்பான்
முக்கோல் அசைநிலை கடுப்ப, நற்போர்
ஓடா வல்வில் தூணி நாற்றிக்
கூடம் குத்திக் கயிறுவாங்கு இருக்கைப்
பூந்தலைக் குந்தம் குத்திக் கிடுகுநிரைத்து
வாங்குவில் அரணம் அரண மாக.

## அரசனுக்கு அமைந்த பாசறை

வேறுபல் பெரும்படை நாப்பண், வேறோர்,
நெடுங்காழ்க் கண்டம் கோலி, யகம்நேர்பு,

## மங்கையர் விளக்குகளை ஏந்துதல்

குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்து,
இரவுபகற் செய்யும் திண்பிடி ஒள்வாள்
விரவுவரிக் கச்சிற் பூண்ட, மங்கையர்,
நெய்(உ)மிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக்
கையமை விளக்கம் நந்துதொறு(ம்) மாட்ட,

## மெய்க்காப்பாளர் காவல் புரிதல்

நெடுநா ஒள்மணி நிழத்திய நடுநாள்,
அதிரல் பூத்த ஆடுகொடிப் படாஅர்
சிதர்வரல் அசைவளிக்கு அசைவந் தாங்குத்
துகில்முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்குநடைப்
பெருமூ தாளர் ஏமம் சூழ

## நாழிகைக் கணக்கர் பொழுது அறிவித்தல்

பொழுது அளந்(து) அறியும் பொய்யா மாக்கள்,
தொழுதுகாண் கையர், தோன்ற வாழ்த்தி,
''எறிநீர் வையகம் வெரீஇய செல்வோய் நின்
குறுநீர்க் கன்னல் இனைத்து, என்று இசைப்ப

## அரசன் படுக்கையில் கண்பொருந்தாது சிந்தனையில் ஆழ்தல்

மத்திகை வளைஇய, மறிந்துவீங்கு செறிவுடை,
மெய்ப்பை புக்க வெருவரும் தோற்றத்து,
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமாண் நல்லில்,
திருமணி விளக்கம் காட்டித் திண்ஞாண்
எழினி வாங்கிய ஈரறைப் பள்ளியுள்
உடம்பின் உரைக்கும், உரையா நாவில்,
படம்புகு மிலேச்சர் உழைய ராக,
மண்(டு) அமர் நசையடு கண்படை பெறாஅது,

## அரசனது சிந்தனை

எடுத்தெறி எஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து,
பிடிக்கண மறந்த வேழம் வேழத்துப்
பாம்புபதைப் பன்ன பரூஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலம் திருத்திச்
சோறுவாய்த்து ஒழிந்தோர் உள்ளியும் தோல்துமிபு
ஐ(வை)ந்நுனைப் பகழி மூழ்கலில், செவிசாய்த்து
உண்ணாது உயங்கு மாசிந் தித்தும்,
ஒருகை பள்ளி ஒ(வொ)ற்றி ஒ(வொ)ருகை,
முடியொடு கடகம் சேர்த்தி, நெடிதுநினைந்து

## பாசறையில் வெற்றி முழக்கம்

பகைவர்ச் சுட்டிய படைகொள் நோன்விரல்,
நகைதாழ் கண்ணி நல்வலம் திருத்தி,
அரசிருந்து பணிக்கு(ம்) முரசுமுழங்கு பாசறை

### தலைவனது பிரிவினால் தலைவி பெற்ற துயரம்

இன்துயில் வதியுநற் காணாள், துயர்உழந்து,
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு,
நீடுநினைந்து தேற்றியும் ஓடுவளை திருத்தியும்,
மையல் கொண்டு மொய்என உயிர்த்தும்,
ஏவுறு மஞ்ஞையின் நடுங்கி, இழைநெகிழ்ந்து,
பாவை விளக்கிற் பரூஉச்சுடர் அழல,
இடஞ்சிறந்து உயரிய எழுநிலை மாடத்து,
முடங்கிறைச் சொரிதரு மாத்திரள் அருவி
இன்பல் இமிழிசை யோர்ப்பனள் கிடந்தோள்
அஞ்செவி நிறைய ஆவின - வென்றுபிறர்
வேண்டுபுலம் கவர்ந்த ஈண்டுபெருந் தானையொடு
விசயம், வெல்கொடி யுயரி, வல னேர்பு,
வயிரும் வளையும் ஆர்ப்ப - அயிர

### அரசன் வெற்றியுடன் மீண்டு வருதல்

செறிஇலைக் காயா அஞ்சன மலர,
முறிஇணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை அங்கை அவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கானம் நந்திய செந்நிலப் பெருவழி,
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகில்,
திரிமருப்பு இரலையொடு மடமான் உகள,
எதிர்செல் வெண்மழை பொழியும் திங்களின்

### அரசனது தேரின் வருகை

முதிர்காய் வள்ளியார் காடுபிறக்கு ஒழியத்
துனைபரி தூக்கும் செலவினர்
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே.

- காவிரிப் பூம்பட்டினத்துப் பொன்வணிகனார்
மகனார் நப்பூதனார் பாடியது.

## முல்லைப்பாட்டு

### நல்லோர் விரிச்சி கேட்டல்

*கார்காலம் தொடங்கிவிட்டது. அகன்ற இடத்தையுடைய உலகத்தை வளைத்து, சக்கரப் படையோடு வலம்புரிச் சங்கினையும் வைத்துள்ள பெரிய கைகளை உடையவன். திருமகளைத் தன்மார்பிலே தாங்குபவன்.*

*மாவலிச்சக்கரவர்த்தி வார்த்த நீர் தன் கைகளிலே விழுந்த அளவில் பெரியதாக வளர்ந்த திருமாலைப் போல மேகமானது ஒலி முழங்கும் கடல்நீரைக் குடித்தது. வலமாக எழுந்தது. மலைமுகடுகளில் தங்கி அகன்ற இடத்தினையுடைய இவ்வுலகத்தை வளைத்து எழுந்தது. விரைந்து சென்று சிறுபொழுதாகிய மாலைக் காலத்தில் மழையைப் பொழிவித்தது. அந்த மாலைக் காலத்தில் அரிய காவலையுடைய மிகப் பழமையான ஊர்ப்பக்கத்தில் போய், யாழிசை போல் இனிமையாக ஒலிக்கும் வண்டுகள் ஆரவாரிக்கும்படி நிறை நாழி நெல்லையும், நறுமணம் கமழும் முல்லையின் முகை அவிழும் புதிய பூக்களைத் தூவி இறைவனை கைகளால் தொழுது, பெரிதும் முதிர்ந்த பெண்கள் நற்சொல் கேட்டு நின்றனர்.*

## ஆய்மகளிரின் நற்சொல்

*சிறிய கயற்றினால் கட்டப்பட்ட இளம் கன்று பால் உண்ணாத துயரத்தால் வருந்தி சுழல்கின்ற தன்மையைப் பார்த்த ஆயர்குலச் சிறுமி ஒருத்தி குளிரால் நடுங்கும் தன் தோளின் மேல் கைகளைக் கட்டிக் கொண்டு அங்கு நின்ற கன்றுகளிடம், வளைந்த கோலினைத் தன் கைகளில் வைத்திருக்கும் இடையர்கள் பின்நின்று செலுத்த "இப்பொழுதே வருவார்கள் உங்களுடைய தாய்மார்கள்"; என்று கூறினாள். அதைக் கேட்ட இடையர்குலப் பெண் ஒருத்தி மிகவும் நல்ல சொற்களை நாங்கள் கேட்போம். அதனால் உன்னுடைய தலைவன் பகைவர்களின் நிலத்தினைக் கவர்ந்துகொண்டு, அவர்கள் அளிக்கும் திறைப் பொருளையும் பெற்றுக்கொண்டு போர்த் தொழிலை முடித்து வருவது உறுதியாகும். உன் மனத்தடுமாற்றத்தினால் ஏற்பட்ட வருத்தத்தைப் போக்குவாயாக! மாமை நிறத்தினை உடையவளே! இவ்வாறு காத்திருப்பதற்கான காரணங்கள் பலவற்றை பலமுறை எடுத்துக் காட்டியும் ஆறுதல் அடையவில்லை. மிகவும் கண் கலங்கி தன் பூப்போன்ற மையுண்ட கண்களிலிருந்து முத்துப் போலும் கண்ணீர்த் துளிகளைக் கொட்டினாள்.*

## பாசறையின் இயல்பு

*காட்டாறு சூழ்ந்த அகன்ற நெடிய காட்டில் தொலைதூரப் பகுதி வரை சென்று மணக்கும் மலர்களுடைய பிடவஞ்செடியுடன் ஏனைய பசுமையான புதர்களையும் வெட்டி, பகைவரின் இடத்திற்குக் காவலாக இருக்கும் வேட்டுவக் குடியின் சிறிய வாயில்களையுடைய அரண்களை அழித்து, காட்டிலுள்ள முட்களை இட்டு வேலியாகிய மதிலைக் கட்டி, திரை ஒலிக்கின்ற கடல்போன்ற அகன்ற பாசறையைக் கட்டினார்கள் மன்னனின் படை மறவர்கள்.*

## யானைப் பாகரின் செயல்

*தழையால் வேயப்பட்ட கூரையையுடைய ஒழுங்காக அமைந்த தெருவில் நாற்சந்தியின் முற்றத்தில் காவலாக நின்ற மதம் பாய்கின்ற கன்னத்தை உடைய சிறிய கண்களை உடைய யானை ஒன்று நிற்கிறது. அந்த யானைக்கு உயர்ந்து வளர்ந்த கரும்பும், அதிமதுரமும், மற்றும் வயலில் விளைந்த நெற்கதிர்களையும் சேர்த்து நெருக்கமாகக் கட்டப் பட்ட இவற்றை உண்ணாமல் அவற்றைத் தன்னுடைய நெற்றியில் தடவியும், கூரிய முனைகளுடைய கொம்புகளில் தம் கையில் வைத்தும் நின்றன. பிளவுபட்ட கூர்மையான கருவியான அங்குசத்தால் வடமொழி யினைக் கற்காத இளைஞன் யானையிடம் வடமொழிச் சொற்கள் சிலவற்றைக் கூறி உணவு கவளங்களைக் கையில்கொடுத்தான்.*

## வீரர்கள் தங்கும் படைவீடுகள்

*ஆடையினைக் காவிக் கல்லில் தோய்த்து உடுத்தும் விரதங்களைச் செய்யும் அந்தணர்கள் முக்கோலினை நட்டு, அதில் ஆடையினைத் தொங்கவிட்டதைப் போல சிறந்தபோரில் புறமுதுகிட்டு ஓடாமைக்குக் காரணமான வலிமையான வில்லினை கீழே ஊன்றி, அவற்றிலே தூணிகளைத் தொங்கவிட்டு, கூடமாகத் தூண்களை நட்டு கயிற்றினை இழுத்துக் கட்டினர். அந்த இடத்தில் பூவேலைப்பாடுகள் நிறைந்த கைவேல்களை ஊன்றிக் கேடயத்தை வரிசையாக அவற்றோடு இணைத்துக் கட்டப்பட்ட வளைந்த வில்லாகிய அரணே காவலாகப் படைவீடுகள் கட்டினர்.*

## பாசறையில் மன்னனுக்குரிய இடம்

*வேறுவேறான பல்வேறு படைகளின் நடுஇடத்தில் நீண்ட கோல் களோடு கூடிய பல்வேறு நிறம் வாய்ந்த திரைகளால் வேற்றுமைப் படுத்தி வேறுஒரு தனிஇடத்தை மன்னனுக்கு என்று அமைத்தனர்.*

## விளக்கேற்றும் பெண்கள்

*சிறிய வளையலை அணிந்த முன்கையினையும், நீண்ட கூந்தல் புரளும் அழகிய சிறிய முதுகுப்புறத்தையும் உடைய பெண்கள் இரவினைப் பகற்பொழுது ஆக்கும் பெரிய பிடி அமைந்த ஒளிவீசும் வாளினைப் பல்வேறு நிறம் அமைந்த இடுப்பில் சேர்த்து கட்டி இருந்தனர். பாவையின் கையில் இருக்கின்ற விளக்கினில் நெய் குறையத் தொடங்கும் பொழுதெல்லாம் நெய் வார்க்கும் குழாயினைக் கொண்டு நெய்யினை வார்த்து நீண்ட திரிகளைக் கொளுத்தினர்.*

## பாசறையில் காவலர்

*நீண்ட நாவினையுடைய அழகிய மணியின் ஓசைகள் அடங்கிய நடுயாமத்தில், காட்டு மல்லிகை பூத்திருக்கும் காற்றில் ஆடுகின்ற*

மல்லிகைக் கொடியின் சிறிய தூறுகள் நீர்த்துளிகளோடு வீசுகின்ற காற்றுக்கு அசைவதைப் போல, தலையினில் தலைப்பாகையைக் கட்டி உடலினைப் போர்வையினால் போர்த்தியுள்ள வயது முதிர்ந்த மெய்க்காப்பாளர், தூக்க மயக்கத்தில்கூட தளர்ந்த நடையோடு திறமையாகப் பாதுகாவலைச் செய்தனர்.

### நாழிகைக் கணக்கர்

நேரம் தவறாமையைச் சரியாகக் கணக்கிட்டு இவ்வளவு என்று கணித்துக்கூறும் நாழிகைக் கணக்கர் மன்னனைக் கண்டு வணங்கி, அவனின் புகழினை எடுத்துக் கூறி வாழ்த்தினர். அலைகடல் சூழ்ந்த உலகத்தில் பகைவரை வெல்லுவதற்குச் செல்பவனே! உன்னுடைய நாழிகை வட்டிலில் கழிந்துள்ள நேரம் இவ்வளவு என்று அறிவித்தனர்.

### யவனர்கள் பாதுகாத்தல்

குதிரைச் சவுக்கினை மடக்கி வளைத்துக் கட்டியதால் புடைத்துத் தோன்றும் நெருக்கிக் கட்டிய ஆடையினையும், மேற்சட்டையினையும் அணிந்து, அச்சம் தரும் தோற்றத்தினையும், வலிமையான உடம்பினையும், வீரத்தையும் உடைய யவனர்கள், புலிச்சங்கிலி தொங்கவிடப்பட்ட, நன்கு அலங்கரிக்கப்பட்ட பெருமை பொருந்திய மன்னர் இருக்கும் இருப்பிடத்தில் அழகிய மணிவிளக்கினை ஒளிரச் செய்தனர்.

### பள்ளியறையினை மிலேச்சர்கள் பாதுகாத்தல்

வலிய கயிற்றினால் வளைத்துக் கட்டப்பட்ட திரைச்சீலைகள் அமைந்த இரண்டு அறைகளைக் கொண்ட மன்னனின் பள்ளியறையில், வாயினால் கருத்துக்களை எடுத்துக் கூற முடியாத மேற்சட்டையணிந்த மிலேச்சர்கள் அருகாமையில் அமர்ந்திருப்பர்.

### பாசறையில் மன்னனின் செயல்

போர் செய்வதில் மிகுந்த ஆர்வத்தினைக் கொண்ட மன்னன், பள்ளியறையில் தூக்கம் கொள்ளாமல் படுத்து இருந்தான். பகைவர்கள் வீசிய வேல் பட்டதால் புண்பட்டிருந்த பெண் யானைகளை மறந்திருக் கின்ற ஆண்யானைகளையும், அடிபட்ட பாம்பு துடிப்பதைப் போன்று ஆண் யானையின் பருத்த துதிக்கை பகைவர்களால் வெட்டுப் பட்டுக் கீழே வீழ்ந்து துடிப்பதையும், தேன் ஒழுகும் வஞ்சிமாலைக்கு வெற்றி யினைத் தந்து செஞ்சோற்றுக் கடன் தீர்ப்பதற்காகப் போர்க் களத்திலே இறந்த படைவீரர்களை நினைத்து வருந்திக் கொண்டிருந்தான். தோலால் செய்யப்பட்ட கடிவாளத்தை அறுத்துக் கொண்டு கூரிய முனைகளை உடைய அம்புகள் பாய்ந்ததால் காதுகளைச் சாய்த்து உணவினை உண்ணாத குதிரைகளை நினைத்தும் வருந்திக் கொண்டிருந்தான்.

*பாசறையில் மன்னன் ஒரு கையினை படுக்கையின் மேல் ஊன்றியும், மற்றொரு கடகம் அணிந்த கையினால் தலையினைத் தாங்கிக் கொண்டும் நீண்ட நேரம் சிந்தித்துக்கொண்டிருந்தான்.*

## வெற்றிக்குப் பின் பாசறையில் மன்னன்

*பகைவரைத் தன் படைக்கலங்களைச் செலுத்திய வலிமையான விரலாலே, தன்னுடைய ஒளியினைத் தங்கச் செய்யும் போருக்கு அணிந்ததாகிய வஞ்சி மாலைக்கு நல்ல சிறந்த வெற்றியினை அளித்தமையால் மனநிறைவு பெற்று பகையரசர்கள் நடுக்கம் கொள்ள வெற்றி முரசு முழங்க பாசறையில் இனிமையாகத் துயில்கொண்டான்.*

## தலைவியின் வருத்தம்

*போரினை முடித்து வெற்றியோடு தலைவனை வரக் காணாமல் துயரமடைந்து வருந்தியதால் அவளின் நெஞ்சமானது ஆற்றியிரு என்று சொல்லிக்கொண்டிருந்தது. ஆனால் தலைவியோ, துயரத்தை மறைக்க முடியாமல் ஆழ்ந்த வருத்தத்தில் இருந்தாள். நீண்ட நேரம் சிந்தித்துக்கொண்டிருந்தாள். பின்னர் தன் மனதினைத் தேற்றிக் கொண்டாள். கையிலிருந்து கழன்று விழுகின்ற வளையல்களைத் திருத்தமுற கழறாமல் அணிந்துகொண்டாள். அறிவு மயங்கி பெருமூச் செறிந்தாள். அம்பு தைத்த மயில்போல நடுங்கினாள். அவளின் அணிகலன்கள் நெகிழ்ந்தன. பாவை விளக்கின் பெரிய சுடர் எரிய, அகன்று சிறந்து உயர்ந்து விளங்கும் ஏழு அடுக்கான அழகிய வீட்டில் கூரை கூடும் இடங்களில் மழைநீர் அருவி போல வீழ்ந்தன. அந்த ஓசையினைக் கேட்டவாறே தலைவி படுத்து இருந்தாள். அந்தத் தலைவியின் காதுகள் நிறையுமாறு ஆரவாரித்தன.*

## போரில் வெற்றி பெற்று தலைவன் வருதல்

*பகைவர்களை வெற்றிகொண்டு, அவர்கள்; விரும்புகின்ற நிலங்களைக் கவர்ந்து மிகப் பெரிய படையோடு வெற்றிக் கொடியினை உயர்த்தியபடி, வெற்றியினை வெளிப்படுத்தும் வகையில் ஊது குழலும், சங்கும் முழங்கத் திரும்புகின்றான் தலைவன்.*

## கார்ப்பருவத்தில் செழித்திருக்கும் முல்லை நிலம்

*முல்லை நிலத்தில் உள்ள நுண்ணிய மணலில் நெருங்கிய இலைகளைக் கொண்ட காயாமலர் மை போல் மலர்ந்து இருந்தது. தளிரையும், பூங்கொத்துக்களையும் உடைய கொன்றைமலர் பொன் போன்று மலர்களைச் சொரிந்து கொண்டு இருந்தன. காந்தள் மலரின் பூக்கள் அழகிய கை போல பூத்து இருந்தன. காடுகளில் செழித்துக் காணப்படும் அழகிய முல்லை நிலத்தின் பெரிய வழியிலே, வானம்*

*தவறாமல் பெய்த மழையின் காரணமாக நன்றாக விளைந்து வளைந்து காணப்படும் அழகிய கதிர்களை உடைய வரகின் ஊடே திரிந்த கொம்பு களைக் கொண்ட ஆண்மானுடன் பெண்மான் துள்ளிக் குதித்து விளையாடும்; இத்தகைய முல்லை நிலத்து எதிரே செல்லும் மேகங்கள் மழையைப் பொழிகின்றது கார்காலம்.*

## அரசனின் தேர் வருகை

*போர் வினைகளைச் சிறப்பாகச் செய்து முடித்த தலைவன் முதிர்ந்த காயினையுடைய வள்ளிக்கொடி படர்ந்த காடு பின்னோக்கிச் சென்று மறைய விரைந்து செல்லும் தேரினை மேலும் விரைவாகச் செலுத்தினான். நெடுந்தேரில் பூட்டப்பட்டுள்ள குதிரையின் குளம்பி லிருந்து வரும் ஒலி தலைவனின் வரவிற்காகக் காத்துக்கொண்டிருக்கும் தலைவியின் காதுகளில் பட்டு மகிழுமாறு ஒலித்தன.*